செ.வெ.எண் .524

## செய்திக் குறிப்பு

நாள்: 18.08.2011

**தாட்கோ மூலம் சுற்றுலா மற்றும் பயண மேலாண்மையில், (IATA) பயிற்சி முடித்தவர்களுக்கு மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. என். சுப்பிரமணியன் அவர்கள் பணிநியமன ஆணை மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்.**

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ இளைஞர்களின் திறன் வளர்ச்சிக்கு தாட்கோ பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகிறது. இப்பயிற்சிகள் மத்திய அரசின் நிறுவனங்களான மத்திய பிளாஸ்டிக் தொழில் நுட்ப பயிற்சி நிலையம் (CIPET), ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு நிலையம் (ATDC), மத்திய காலணி பயிற்சி நிலையம் (CFTI) காலணி மேம்பாட்டு மற்றும் வடிவமைத்தல் நிலையம் (FDDI) மற்றும் திரைப்படதுறை சார்ந்த பல்வேறு பயிற்சிகள் தேசிய திரைப்பட வளர்ச்சி கழகம் (NFDC) மூலம் நடத்தப்படுகிறது. இவைத் தவிர ஏசி மெக்கானிக் , டீசல் மெக்கானிக், உணவு தயாரித்தல், உணவு பரிமாறுதல். அழகு கலை . தையல் கலை போன்ற பயிற்சிகள் வேலை வாய்ப்புத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகிறது. மேலும் சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை, தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான பயிற்சிகள் நற்பெயர் பெற்ற தனியார் நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகிறது. தமிழக அரசு ஆதி திராவிடர் பழங்குடி.யினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக ஆண்டு தோறும் சுமார் 22000 மாணவர்கள் பயன் பெறும் வகையில் ரூ. 25.00 கோடி வழங்குகிறது.

இப்பயிற்சியின் ஒரு பகுதியாக சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை துறையில் கனடா நாட்டு மாண்ட்ரியல் நகரிலுள்ள பன்னாட்டு வான் போக்குவரத்து கழகத்தால் (International Air Transport Association, Montreal, Canada) நடத்தப்படும் IATA Foundation பயிற்சி சென்னையிலுள்ள Kuoni Academy மூலம் அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கு மாணவர் ஒருவருக்கு ரூ. 40,000/ செலவில் தாட்கோ மூலம் இப்பயிற்சி வழங்கப்பட்டது. இவ்வகையான பயிற்சி அளிப்பது இதுவே முதல்முறை.

இச் சான்று பெற்றவர்கள் பல்வேறு நிறுவனங்களில் சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை துறையில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானச்சீட்டு பதிவு செய்தல், அந்நிய செலாவணி மேலாண்மை, நட்சத்திர விடுதிகளில் அலுவலக மேலாண்மை போன்ற தனியார் துறை பணிகளில் பணிபுரிய வாய்ப்பு பெறுகின்றனர். இத்தகைய வாய்ப்பினை ஆதிதிராவிட மாணவர்களுக்கு இவ் அரசு வழங்கி வருகிறது.

இந்த IATA தேர்வு எழுதிய 20 ஆதி திராவிட மாணவர்களில் 16 நபர்கள் CANADA Montreal ல் உள்ள பன்னாட்டு வான் போக்குவரத்து கழகத்தால் ( International Air Transport Association, Montreal, Canada) நடத்தப்பட்ட தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். இவர்களில் முதற்கட்டமாக 13 நபர்களுக்கு தனியார் துறைகளில் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. என். சுப்பிரமணியன் அவர்கள் இன்று KUONI பயிற்சி நிலையத்தில் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் திரு. ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப. , தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு. சா. விஜயராஜ் குமார் இ.ஆ.ப., மற்றும் பயிற்சி நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்
(செய்தி வெளியீடு)
செய்தி மக்கள தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009